இனிமையான குழந்தைகளே! நீங்கள் இப்போது ஈஸ்வரிய பொக்கி^ங்களினால் வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள், ஞான பொக்கி^ங்களை வழங்கி அனைவருக்கும் நன்மை செய்வது தான் உங்களது கடமையாகும்.

கேள்வி: மாயையின் கிரஹச்சாரம் வந்ததும் குழந்தைகள் எந்த ஒரு அதிசயமான விளையாட்டை விளையாடுகின்றனர்?

பதில்: எப்போது கிரஹச்சாரம் வந்து விடுகிறதோ அப்போது இப்படிப்பட்ட உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குரு மூவரையும் மறந்து விடுகின்றனர். நல்ல நல்ல, நிச்சய புத்தியுடைய குழந்தை களும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்று கூறுவது ஆச்சரிய மாக இருக்கிறது. ஆச்சரியத்துடன் கேட்கின்றனர், கூறுகின்றனர், சென்று விடுகின்றனர். இன்று மம்மா, பாபா என்று கூறுகின்றனர், நாளை காணாமல் போய் விடுகின்றனர். என்னவென்று புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனாலும் பாபா என்ற கூறிக் கொண்டு அனைவரும் மீண்டும் வருவார் கள், ஏனெனில் அனைவருக்கும் சரணாகதி (அடைக்கலம்) ஒரே ஒரு தந்தையிடம் மட்டுமே கிடைக்கும்.

பாடல்: ஓம் நமச் சிவாய .......

ஓம்சாந்தி. இந்த பாட்டை குழந்தைகள் பல காலமாக கேட்டுக் கொண்டு வருகிறீர்கள். மேலும் தனது பரலௌகீக பரம்பிதா பரமாத்மாவை நினைவும் செய்கிறீர்கள். யாரிடமிருந்து சிறிதளவாவது சுகம் கிடைக்குமோ அவரைத் தான் நினைவு செய்வர். காசியில் சிவனின் கோயில் இருக்கிறது. அங்கு பலர் செல்கின்றனர் மற்றும் தனது நிராகார தந்தையை நினைவு செய்கின்றனர். எவ்வாறு லெட்சுமி நாராயணனை அனைவரும் நினைவு செய்கின்றனர், ஏனெனில் அவர்களது இராஜ்யத் தில் சுகம் இருந்தது, அதனால் தான் இராஜா, இராணிக்கு மகிமை ஏற்படுகிறது. ஓ இறை தந்தையே! என்று முழு உலகமும் நினைவு செய்கிறது. அவர் ஒருவர் தான் உலகத்திற்கு தந்தையாவார், வேறு யாரும் உலகிற்கு தந்தை கிடையாது. உலகத் தந்தை நிராகார கடவுள், அவர் ஒருவருடையதைத் தான் அவதாரம் என்றும் கூறுகின்றனர். அந்த ஒரு தந்தைக்குத் தான் தனக்கென்று சூட்சும அல்லது ஸ்தூல சரீரம் கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கும் சூட்சும சரீரம் இருக்கிறது. அவர் களையும் அவதாரம் என்று கூற முடியாது. அவதாரம் என்ற வார்த்தை மிகவும் உயர்ந்தது ஆகும். அவர் அனைவருக்கும் தந்தை ஆவார், அனைவருக்கும் சுகம் கொடுக்கும் பதீத பாவன் ஆவார். வரக்கூடிய அனைத்து மனித ஆத்மாக்களும் முத-ல் சதோ பிரதானமாகவும் பிறகு சதோ, ரஜோ, தமோவிலும் வருகின்றனர். அவர்கள் நாடகத்தின் படி தூய்மை இழந்து, துக்கமானவர்களாக ஆகியே தீர வேண்டும். மறுபிறவி அனைவரும் எடுக்கின்றனர் அல்லவா! பிரம்மாவும் மனிதன் என்று கூறப்படுகின்றார். விஷ்ணுவின் இரண்டு ரூபமாகிய லெட்சுமி, நாராயணனை யும் மனிதன் என்று தான் கூறப்படுகிறது. ஆக அவர்களையும் நாம் அவதாரம் என்று கூற முடியாது. அவதாரம் எடுப்பது ஒரே ஒருவர் மட்டுமே. குழந்தைகளுக்கு ஆஸ்தி கொடுப்பதற்காகவே தந்தை வருகின்றார். எப்போது முழு உலகமும் தூய்மை இழக்கின்றதோ அப்போது தான் வருகின்றார். அனைத்து மனிதர்களும் இறை தந்தையின் படைப்புகள் ஆவர்.

வித விதமான பெயருடன் அனைவரும் இறை தந்தை என்று அவசியம் கூறுகின்றனர். ஒவ்வொரு ஆத்மாவின் புத்தியும் அந்த தந்தையை நினைவு செய்கிறது. பிரம்மா, விஷ்ணு, சங்கரை நினைவு செய்கிறது என்பது கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கரை தந்தை என்று கூற முடியாது. தந்தை என்று ஒரே ஒரு படைப்பவரைத் தான் கூற முடியும். எப்போது சங்கமயுகம் ஏற்படுகிறதோ, அனைத்து மனிதர்களும் தூய்மை இல்லாதவர்களாக ஆகிவிடுகிறார்களோ அப்போது க-யுகத்தை சத்யுகம் ஆக்குவதற்காக, கல்பத்தின் சங்கமயுகத்தில் தந்தை அவதாரம் எடுகின்றார். படைப்பவர் அல்லவா! பிரம்மாவின் மூலம் ஸ்தாபனை செய்விக்கின்றார், சங்கர் மூலம் விநாசம், விஷ்ணுவின் மூலம் பாலனை செய்விக்கின்றார் என்று காண்பிக்கின்றனர். வருவதும் பாரதத்தில் தான். சிவராத்திரியும் பாரதத்தில் தான் கொண்டாடப்படுகிறது. ஆனால் சிவனின் பெயர், உருவம், தேசம், காலம் என்ன? என்பதை அறியவில்லை. என்னை அறிந்து கொள்ளாமல் சர்வவியாபி என்று கூறி விட்டனர் என்று தந்தை கூறுகின்றார். என்னை அதிகம் நிந்தனை செய்து விட்டனர், அதன் காரணத்தினால் பாரதவாசிகள் மிகவும் தூய்மை இல்லாதவர்களாக ஆகிவிட்டனர். எப்போது பாரதத்தில் அனைவரும் தூய்மை இல்லாத ஆத்மாக்களாக ஆகிவிடுகின்றனரோ, அப்போது நான் வருகிறேன். க-யுகத்தில் யாரும் புண்ணிய ஆத்மாவாக, தூய்மையான ஆத்மாவாக இருக்க முடியாது. தூய உலகில் தூய ஆத்மாக்கள் இருப்பர், அது சம்பூர்ண நிர்விகாரி உலகம் என்று கூறப்படுகிறது. அதை ஒப்பிடும் போது க-யுகம் விகார உலகமாகும். க-யுகத்தின் கடைசி மற்றும் சத்யுகத்தின் ஆரம்பத்தை தான் சங்கமம் என்று கூறப்படுகிறது. தூவாபர் மற்றும் திரேதா யுகத்தை சங்கமம் என கூற முடியாது. கடைசி என்றால் முழு உலகின் கடைசி மற்றும் புது உலகின் ஆரம்பமாகும். சத்யுகம் பாவன உலகம், பிறகு கலைகள் குறைந்து கொண்டே செல்கிறது. சத்யுகமும் திரேதாயுகமும் ஒரே மாதிரி சமமானது என கூற முடியாது. குழந்தைகள் வரிசைக் கிரமமாகத் தான் என்னை புரிந்து கொள்கின்றனர் என்று தந்தை சொல்கிறார். இந்த சமயத்தை தான் இப்படி கூறப்படுகிறது. ஏனெனில் மாயை எதிரில் இருக்கிறது. அடிக்கடி மறக்க வைத்து விடு கிறது. நாம் பிரம்மாவின் குழந்தைகள், சிவனின் பேரன்கள் என்று கூறுகின்றனர். இவ்வாறு கூறிய பிறகும் மறந்து விடுகின்றனர். அஞ்ஞானத்தில் இப்படிப்பட்ட விசயங்களை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். நாம் பிரம்மா வின் குழந்தைகள் கிடையாது என்று இங்கு நேரிலேயே கூறிவிடுகின்றனர். ஒரேயடியாக மறந்து விடுகின்றனர். ஒருபோதும் நினைவு செய்ய முடியாத அளவிற்கு மறந்து விடுகின்றனர். இது மிகவும் ஆச்சரியமான விசயமாகும். சொர்க்கத்தை உருவாக்கக் கூடியவர் பரம்பிதா பரமாத்மா, மேலும் நரகத்தை உருவாக்கக் கூடியவன் இராவணன், மாயை என்பதையும் பாரத வாசிகள் அறிவார்கள். பிறகு இரண்டு விசயங்களையும் மறந்து விடுகின்றனர். தந்தையையும் அறிந்து கொள்வது கிடையாது, இராவணனையும் அறிந்து கொள்வது கிடையாது. சிவனை பூஜிக்கின்றனர், இராவணனை எரிக்கின்றனர். ஆனால் ஆச்சரிய விசயம் என்னவெனில் யாரை பூஜிக்கிறீர்களோ அவரது தொழில், சரித்திரம் பற்றி அறியவில்லை. மேலும் யாரை எரிக்கிறோமோ அந்த இராவணன் என்றால் என்ன? என்பதையும் அறியவில்லை. இராஜா, ராணி எப்படியோ அதே போன்று தான் பிரஜைகள், அதில் அனைவரும் வந்து விடுகின்றனர், அனைவரும் அசுத்த புத்தியுடையவர்களாக இருக்கின்றனர். யார் தர்மத்தை ஸ்தாபனை செய்ய வருகிறார்களோ அவர்களை அவதாரம் என்று கூற

முடியாது என்று தந்தை புரிய வைக் கின்றார். அவதாரம் ஒரே ஒரு தந்தை மட்டுமே பாரதத்தில் எடுக்கின்றார். ஆனால் சுயம் பாரதவாசிகளே மறந்து விடுகின்றனர். பரம்பிதா பரமாத்மாவை பூஜை செய்கின்றனர், ஆனால் அவர் எப்போது வந்தார்? என்ன செய்தார்? என்று எதுவும் அறியவில்லை. தந்தை மற்றும் படைப்பின் முதல், இடை, கடையை அறிய வில்லை, தேவி தேவதைகளின் சரித்திரத்தையும் அறியவில்லை. அதனால் தான் துக்கமானவர்களாக இருக் கின்றனர். பாரதவாசிகள் முத-ல் எவ்வளவு சுகத்துடன் இருந்தனர்! முழு உலகிற்கும் எஜமானர்களாக இருந்தனர். நாம் பாரதவாசிகள் அனைவரும் தூய்மையானவர்களாக, உயர்வானவர்களாக இருந்தோம் என்பதை அறிய வில்லை. ஒருவேளை இருந்தோம் எனில் எப்படி ஆனோம்? என்று எதுவும் அறியவில்லை, இதுவும் ஆச்சரியமாக இருக்கிறது. தந்தை எவ்வளவு தெளிவாகப் புரிய வைக்கின்றார்! யாருக்கு புரிய வைப்பார்? தனது குழந்தைகளுக்குப் புரிய வைக்கின்றார். குழந்தைகளின் எதிரில் தான் வெளிப்படுகிறேன். ஆனால் குழந்தைகளும் வெளிப்பட (பிரத்யட்சமாக) வேண்டும், மம்மா, பாபா என்று கூறிய பிறகு மறந்து விடுகின்றனர். இது தான் ஆச்சரியமாக இருக்கிறது. அஞ்ஞான காலத்தில் ஒருபோதும் தந்தை, ஆசிரியர், குருவை மறக்கமாட்டார்கள். இங்கு பரலௌகீக தந்தை மிகவும் உயர்ந்தவராக இருக்கின்றார், அனைத்து துக்கங்களையும் தூரமாக்குகின்றார், அவரை மறந்து விடுகிறீர்கள். அதனால் தான் ஆச்சரியத் துடன் கேட்கிறீர்கள், கூறுகிறீர்கள், ஆஹா மாயை எவ்வளவு பிரபலமாக இருக்கிறது! எல்லை யற்ற தந்தையினுடையவர்களாக ஆகிறீர்கள், ஆசிரியரை புரிந்து கொண்டு அவரிடம் படிக் கிறீர்கள், பதீத பாவன் சத்குரு என்று பக்காவாக புரிந்து கொண்ட பிறகும் மூவரையும் மறந்து விடுகிறீர்கள். ஒருவரை மறந்து விட்டால் மூவரையும் மறந்து விடுவீர்கள். ஒருவரை நினைவு செய்தால் மூவரின் நினைவும் இருக்கும். ஏனெனில் இந்த மூவரும் இணைந்து இருக்கின்றனர். சுயம் தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவாக இருக்கின்றார், அதுவும் (கடமையாற்றுவதில்) மிகச் சரியாக இருக்கின்றார். நான் தந்தையாக இருக்கிறேன், உங்களை அவசியம் தனது பரந்தாம வீட்டிற்கு அழைத்துச் செல்வேன் என்று கூறுகின்றார். நான் உங்களுக்கு ஆசிரியராக இருக்கிறேன், படிப்பு கற்பித்து உங்களை அவசியம் இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குவேன். நான் சத்குருவாக இருக்கிறேன், குழந்தைகளாகிய உங்களை வரிசைக்கிரமமான முயற்சியின் படி அனைவரையும் திரும்பி அவசியம் அழைத்துச் செல்வேன். இந்த உத்திரவாதம் செய்கிறேன். இப்படிப்பட்ட தந்தையையும் நாளடைவில் மறந்து விடுகிறீர்கள். மாயையின் கிரஹச்சாரம் அந்த அளவிற்கு இருக்கிறது, இன்று பாபா என்று கூறுகின்றனர், நாளை எமக்கு சந்தேகம் வந்து விட்டது என்று கூறுவர். இவ்வாறு நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது. சிலர் கடைசியில் வந்து ஆஸ்தி அடைவர். கிரஹச்சாரம் நீங்கி விட்டால் வந்து விடுவர். இவ்வாறு நாடகத்தில் பதிவாகியிருக் கிறது. விநாசம் ஆகியே தீர வேண்டும். பிறகு யாருடைய பாதுகாப்பை பெறுவீர்களா? அனைவருக்கும் சத்கதி கொடுக்கும் வள்ளல் ஒரே ஒருவர் மட்டுமே. அனைவருக்கும் சரணாகதி (பாதுகாப்பு) கொடுப்பவரும் அவரே, அனைவரும் வந்து தலை வணங்குவர். ஆனால் அந்த நேரத்தில் என்ன செய்ய முடியும்? இந்த நிலை ஏற்படும் போது இவ்வளவு கூட்டம் ஒன்றாக வர முடியாமல் போய்விடும். இந்த விளையாட்டே மிக ஆச்சரியமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு கூட்டம் வந்து என்ன செய்யும்? பிறகு சீக்கிரமாகவே விநாசம் எதிரில் வந்து விடும். தந்தை கூறுகின்றார் - என்னை

நினைவு செய்யுங்கள், இப்போது வீடு திரும்ப வேண்டும் என்ற சப்தங்களை கேட்பார்கள். மற்றபடி சந்திப்பதால் என்ன லாபம் இருக்கிறது! அயல்நாட்டில் இருந்தாலும் தந்தையை நினைவு செய்து கொண்டே யிருந்தால் பாவ காரியங்கள் அழிந்து விடும் என்று பாபா வழி கூறுகின்றார். கடைசி நிலை நல்ல நிலையாக ஆகிவிடும். அனைவருக்கும் மரணம் வந்தே ஆகும். ஒரே இடத்தில் இவ்வளவு பேர் சந்திக்க முடியாது. ஆனால் நாடகம் மிகவும் ஆச்சரியமானதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. தந்தை வந்திருக்கின்றார் என்பது அனைவருக்கும் தெரிந்து விடும். கிறிஸ்தவர்கள் அனைவரும் போப்பாண்டவரை சந்தித்து விடுவது கிடையாது. அனைவரும் வந்து சேர்ந்து விட முடியாது. தந்தை வந்திருக்கின்றார், அனைவரையும் விடுவித்து அழைத்துச் செல்வார் என்பதும் கடைசியில் அனைவருக்கும் தெரிந்து விடும். மிகப் பெரிய விநாசம் ஏற்படயிருக்கிறது. ருத்ர மாலை மிகவும் உயர்ந்தது! அதை ஒப்பிடுகையில் விஷ்ணு மாலை எவ்வளவு சிறியதாக இருக்கிறது! இவர்கள் அனைவரும் விஷ்ணு வினுடையவர்கள் என்று நீங்கள் கூறுவீர்கள். முத-ல் விஷ்ணு ஆகிவிடுகிறார் அல்லவா! மனித இனத்தின் கிரேட் கிரேட் கிரான்ட் தந்தை பிரம்மா ஆவார். பிரம்மாவே பிறகு விஷ்ணுவாக ஆகின்றார். விஷ்ணுவின் இரண்டு ரூபம் லெட்சுமி, நாராயணன் ஆகும். எந்த வித்தியாசமும் கிடையாது. இது மிகவும் ஆச்சரியமான விசயமாகும். இதை சிந்தித்துக் கொண்டே இருந்தால் குஷியும் ஏற்படும். அவதாரம் என்று ஒரே ஒருவரைத் தான் கூற முடியும் என்று பாபா புரிய வைத்திருக்கின்றார். ஏனெனில் அவருக்கென்று சரீரம் கிடையாது. மற்ற அனைவருக்கும் அவரவர்களுக்கென்று சரீரம் இருக்கிறது. பாபா சரீரத்தை கடனாக எடுக்க வேண்டியிருக்கிறது. மற்றவர்களுக்கு அவரவர் களுக்கென்று சரீரம் இருக்கிறது. கடனாக எடுக்கப்படும் பொருள் மற்றவருடையதாக இருக்கும். நான் கடனாக எடுத்திருக்கிறேன் என்று எந்த ஆத்மாவும் கூற முடியாது. எனது சரீரம் என்று ஆத்மா கூறுகிறது. இது எனது சரீரம் என்று சிவபாபா கூற முடியாது. குழந்தை களுக்கு ஞானம் கொடுப் பதற்காகவும், யோகா கற்றுக் கொடுப்பதற்காகவும் அவர் உடலை ஆதராமாக எடுக்கின்றார். பாபா ஆதாரமாக எடுத்திருக்கின்றார் என்பதை குழந்தைகளும் அறிவீர்கள், இருப்பினும் அடிக்கடி மறந்து விடுகிறீர்கள். தேக அபிமானிகளாக ஆகின்றபோது அந்த மரியாதை மறைந்து விடுகிறது. இல்லை யெனில் பாபா எப்படிப் பட்டவர்? என்பதை அறிந்திருக்கிறீர்கள் எனில் அவரது கட்டளைப்படி அவசியம் நடக்க வேண்டும். ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் பெற வேண்டும். ஆனால் மாயை மறக்க வைத்து விடுகிறது. சில நேரம் ஸ்ரீமத் படியும், சில நேரம் அசுர வழிப்படியும் நடக்கிறீர்கள். சில நேரம் சுமை அந்த பக்கம் இழுக்கிறது, சில நேரம் இலேசாகி விடுகிறது. சில நேரம் மாயை வழிப்படியும், சில நேரம் இவரது வழிப்படியும் நடக்கிறீர்கள். ஒரே ஒரு சிவபாபாவின் வழிப்படி நடந்தால் நல்லது, முன்னேற்றமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும்.ஆனால் தனது வழிப்படியும் நடக்கிறீர்கள். தந்தை என்ன கட்டளையிட்டாலும் அதை நடைமுறையில் அவசியம் கொண்டு வர வேண்டும். பிறகு எது நடந்தாலும் நாடகத்தில் இப்படி இருந்திருக்கிறது என்று கூறுவார். இராஜ்யம் ஸ்தாபனை ஆகியே தீர வேண்டும், இதில் துளியளவும் வித்தியாசம் ஏற்பட முடியாது. சந்திப்பதற்கு பலர் வருகின்றனர், வீட்டிற்குச் சென்ற பின்பு நின்று விடுகின்றனர். முழு நம்பிக்கையுடன் வருவது கிடையாது. சிலருக்கு 5 சதவிகிதம் நம்பிக்கை இருக்கிறது எனில் சிலருக்கு 15 சதவிகிதம் இருக்கிறது. அஞ்ஞான காலத்திலும் எப்போது இவர் தான் என்னுடைய

சித்தப்பா, மாமா என்று தெரிந்து விடுகிறதோ பிறகு ஒருபோதும் சந்தேகம் வருவது கிடையாது. இங்கு மாயை சந்தேகத்தில் கொண்டு வந்து கிழே தள்ளி விடுகிறது. நம்பிக்கை ஏற்படவேயில்லை. நம்பிக்கை ஏற்பட்டு ஏற்பட்டு பிறகு மறைந்து விடுகின்றனர். ஆச்சரியம் அல்லவா! இவர் ஒருவர் தான் தந்தை, ஆசிரியர், சத்குரு ஆவார். ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமான முயற்சியின் படி முந்தைய கல்பத்தைப் போன்று முன்னேறுகின்றனர். கல்பத்திற்கு முன்பு யார் எவ்வளவு ஆஸ்தி அடைந்திருந்தார்களே, ஒவ்வொருவரின் நடத்தையும் அவ்வாறே நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. இந்த நேரத்தில் பிராமணர்களாகிய நமது மாலை உருவாக்க முடியாது. ஏனெனில் கிரஹச் சாரம் வந்து கொண்டே இருக்கும் போது மாலையில் இருந்து விடுப்பட்டு போய் விடுகின்றனர். பிறகு பிரஜைக்கான மாலையில் வந்து விடுவர். பிரஜைகளிலும் வித்தியாசம் இருக்கிறது. மாலை அவசியம் இருக்கிறது. ருத்ர மாலை மற்றும் விஷ்ணு மாலை - இது ஆன்மீக மாலை, அது உலகாய மாலை ஆகும். இது புரிய வைப்பதற்கு மிக நல்ல விசால மற்றும் தூய புத்தி தேவை. நேர்மையானவராகவும், கட்டளைப்படி நடப்ப வராகவும் இருக்க வேண்டும், ஸ்ரீமத் மீது முழு கவனம் கொடுப்பவராக இருக்க வேண்டும். சிவபாபாவின் சேவை எவ்வளவு உயர்ந்ததாக இருக்கிறது! பதீத பாவனனே வாருங்கள் என்று கூறுகின்றனர். பாபா தூய்மையான உலகை ஸ்தாபனை செய்கின்றார். அவர்களே பிறகு தூய்மை இல்லாதவர்களாக ஆகின்றனர். அவர்களை மீண்டும் தூய்மை ஆக்குவதற்காக தந்தை வர வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் எவ்வளவு ஆச்சரியமான பாகம் நடிக்கின்றார்! ஆகையால் இந்த நேரத்தில் ப-ஆவது பரம்பிதா பரமாத்வின் பாகத்திற்கு இருக்கிறது. நம்பர் ஒன் நினைவுச் சின்னம் ஒரே ஒருவருடையது. யார் அனைத்தையும் செய்கிறாரோ அவருக்குத் தான் ஜெயந்தி கொண்டாடு கின்றனர். யாரை உருவாக்குகின்றாரோ அவர்களுக்கு எவ்வளவு மகிமை இருக்கிறது! மற்றபடி இந்த நேரத்தில் இருக்கும் மனிதர்கள் அனைவரும் தூய்மை இல்லாதவர்களாக தரம் குறைந்தவர்களாக இருக் கின்றனர். சத்யுகத்தில் உயர்வானவர்களாக, ஃபரிஸ்தாக்களாக இருந்தனர். இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது. இப்போது நாம் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி அடைந்து கொண்டிருக் கிறோம். இப்போது நாம் என்ன கொண்டாட வேண்டும்? கொண்டாட்டம் எல்லாம் பக்தி மார்க்க மாகும். இந்த நேரத்தில் ஸ்ரீமத் படி நீங்கள் அதிக முயற்சி செய்ய வேண்டும், சேவை செய்ய வேண்டும். கண்காட்சிகளில் புரிய வைக்கும் இந்த பழக்கம் மிகவும் நன்றாக உருவாக்கப் பட்டிருக்கிறது. ஈஸ்வரிய சேவையில் குழந்தைகள் மிகுந்த கவனம் கொடுக்க வேண்டும். யார் ஈஸ்வரிய கள்ஞ்சியத்தால் வளர்கிறீர்களோ, அவர்கள் முழுமையாக சேவை செய்ய வேண்டும், அதன் மூலம் மனிதர்களுக்கு விரைவாக நன்மை ஏற்பட்டு விட வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) முன்னேறும் கலையில் செல்வதற்காக ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். தந்தையை யதார்தமாகப் (சரியாகப்) புரிந்து கொண்டு ஆத்ம

அபிமானியாகி முழு மரியாதை செலுத்த வேண்டும்.

2)

2) ஈஸ்வரிய சேவையில் முழுமையிலும் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். நினைவின் மூலம் புத்தியை தூய்மையாக மற்றும் விசாலமாக ஆக்க வேண்டும்.

வரதானம் : ஞானத்தின் ஒளி மற்றும் சக்தி மூலம் ஆத்ம உணர்வில் இருக்கக் கூடிய ஸ்மிருதி சொரூபம் ஆகுக.

உங்களது அநாதி (நிரந்தர) ரூபம் நிராகாரி ஜோதி சொரூப ஆத்மா மற்றும் ஆதி சொரூபம் தேவ ஆத்மா ஆகும். எப்போது ஞானத்தின் ஒளி-சக்தியின் ஆதாரத்தில் ஆத்ம உணர்வுடன் கூடிய ஸ்திதியில் இருப்பதற்கான அப்பியாசம் இருக்குமோ, அப்போது இரண்டு சொரூபங்களும் சதா நினைவில் இருக்கும். பிராமணர் ஆவது என்றால் ஞானத்தின் ஒளி-சக்தியின் ஸ்மிருதி சொரூபம் ஆவதாகும். யார் ஸ்மிருதி சொரூபமாக இருக்கிறாரோ, அவர் தாமும் திருப்தியாக இருப்பார் மற்றும் மற்றவர்களையும் திருப்திப் படுத்துவார்.

சுலோகன்: சாதாரணத் தன்மையில் மகான் தன்மையை அனுபவம் செய்வது தான் மகான் ஆத்மா ஆவதாகும்.